தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 27.08.2013

### விதை நெல் கூடுதல் விலை: நடவடிக்கை எடுக்க விவசாயிகள் கோரிக்கை

கடலூர் மாவட்டத்தில் விதை நெல் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுவதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து குறிஞ்சிப்பாடி உழவர் மன்ற விவசாயி ராமலிங்கம், ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமாரிடம் அளித்த மனு விவரம்:

கடலூர் மாவட்டத்தில் தானே புயல், வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங்களினால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

விவசாயத்தையே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்க்கை நடத்தி வரும் விவசாயிகள் பெரிதும் அவதிப்படுகின்றனர்.

வறட்சியால் இனிமேல் விவசாயம் நடைபெறுமா? என்று இருந்த நிலையில் மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதாலும், கடலூர் மாவட்டத்தில் ஆங்காங்கே பெய்துவரும் மழையை நம்பியும் விவசாயிகள் சம்பா பயிர் சாகுபடியில் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கடலூர் மாவட்டம் முழுவதிலும் 1 லட்சம் ஹெக்டர் நிலப்பரப்பில் சம்பா சாகுபடி நடைபெற்று வருகிறது.

சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குத் தேவையான விதைநெல், உரங்கள் வேளாண் விற்பனை மையங்கள் மற்றும் தனியார் கடைகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

விவசாயிகள் வெள்ளை பொன்னி, பி.பி.டி., ஏ.டி.டி.19 மற்றும் 38 போன்ற விதை நெல்லை விரும்பி வாங்கி நாற்று விட்டு வருகின்றனர்.

மொத்த விதை நெல் விற்பனையில் வேளாண்மை துறை மூலம் 18 சதவீதம் மட்டுமே விவசாயிகளுக்கு வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மீதம் 82 சதவீதம் விதை நெல் தனியார் விற்பனையாளர்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது.

இதை சாதகமாகப் பயன்படுத்தி சில தனியார் விற்பனையாளர்கள் விதை நெல்லை கூடுதல் விலைக்கு விற்பனை செய்கின்றனர்.

ஒரு கிலோ வெள்ளை பொன்னி விதை நெல் ரூ.29.60-க்கு கொள்முதல் செய்கிறார்கள். அரசு ரூ.33.40-க்கு விற்பனை செய்கிறது. தனியார் கடைகளில் ரூ.42, 43-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இவற்றில் பெரும்பாலான கடைகளுக்கு விதை நெல் விற்பனை செய்வதற்கு உரிமம் கிடையாது.

மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுத்து அரசு விற்பனை செய்யும் விலைக்கே விதை நெல்லை தனியாரும் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**வேளாண் மாணவர்கள் கிராமத்தில் தங்கி பயிற்சி**

சிதம்பரம் அருகே உள்ள கந்தகுமாரன் கிராமத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்புல மாணவர்கள் 3 மாதங்கள் தங்கிப் பயிற்சி பெறும் முகாம் தொடக்க விழா சனிக்கிழமை நடைபெற்றது.

தொடக்க விழாவுக்கு, ஊராட்சி மன்றத் தலைவர் வ.கமலக்கண்ணன் தலைமை வகித்தார்.

வேளாண் விரிவாக்கத் துறை உதவிப் பேராசிரியர் டி.பாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். உழவியல் துறை உதவிப் பேராசிரியர் எஸ்.பாபு, தாவர நோயியல்துறை உதவிப் பேராசிரியர் டி.சிவக்குமார் ஆகியோர் பேசினர்.

விழாவில், கிராம நிர்வாக அலுவலர் சி.கலைச்செல்வி, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கோ.விஸ்வநாதன் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

வேளாண்புல மாணவர்கள் அக்கிராமத்தில் தங்கி விவசாயிகளின் நெல் சாகுபடி மற்றும் தோட்டக்கலை சாகுபடி குறித்து தெரிந்து கொள்ளும் வகையில் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது.

**முந்திரி, மா கன்றுகள் மானிய விலையில் விநியோகம்**

தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ் குறிஞ்சிப்பாடி வட்டார விவசாயிகளுக்கு மானியத்தில் முந்திரி மற்றும் மா கன்றுகள் விநியோகிக்கப்படுகின்றன.

இது குறித்து தோட்டக்கலை உதவி இயக்குநர் முருகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: குறிஞ்சிப்பாடி வட்டார விவசாயிகளுக்கு தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ் முந்திரி மற்றும் மா சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் புதிய பரப்பில் சாகுபடி செய்யவும், பழைய தோட்டத்தைப் புதுப்பிக்கவும் ஹெக்டருக்கு முந்திரி 200 கன்றுகளும், மா 100 கன்றுகளும் முழு மானியத்தில் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் நில உரிமைக்கான ஆவணங்கள் மற்றும் வருவாய் (சிட்டா, அடங்கல், ரேஷன் கார்டு) ஆவணங்களை தோட்டக்கலைக் களப் பணியாளரிடம் ஒப்படைத்து முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்து பயனடையலாம்.

தற்போது பருவமழை பெய்யத் தொடங்கியுள்ளதால், உழவுப் பணிகள் முடித்து முந்திரி நடவு செய்ய குழி எடுத்து தயார் நிலையில் வைத்துள்ள விவசாயிகளின் நலன் கருதி விஆர்ஐ-3 முந்திரி கன்றுகள் நெய்வேலி மற்றும் விருத்தாசலம் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் தயார் நிலையில் உள்ளது.

விருப்பமுள்ள குறிஞ்சிப்பாடி வட்டார விவசாயிகள், களப்பணியாளரை நேரில் அணுகி, கன்றுகளை அரசுப் பண்ணைகளில் இருந்து எடுத்துச் செல்ல கடிதத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

**29-ல் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம்**

உடுமலை வருவாய்க் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இம்மாதம் 29-ஆம் தேதி நடைபெற உள்ளது.

இதுகுறித்து வருவாய்க் கோட்டாட்சியர் வே.லதா விடுத்துள்ள செய்திக் குறிப்பு:

உடுமலை வருவாய்க் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆகஸ்ட் 29-ஆம் தேதி (வியாழக்கிழமை) காலை 10 மணி அளவில் உடுமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

அனைத்துத் துறை அதிகாரிகளும் கலந்து கொள்ளும் இந்தக் கூட்டத்தில் உடுமலை, மடத்துக்குளம் வட்டத்தில் உள்ள விவசாயிகள் பங்கேற்று தங்களது குறைகளை எடுத்துக் கூறி தீர்வு காணலாம்.

## இன்று வெள்ளாடு வளர்ப்பு குறித்து இலவசப் பயிற்சி

திருப்பூர் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி, ஆராய்ச்சி மையம் சார்பில் வெள்ளாடு வளர்ப்பு குறித்து செவ்வாய்க்கிழமையும் நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்து வியாழக்கிழமையும் (ஆக. 29) இலவசமாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இது குறித்து கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி, ஆராய்ச்சி மையத் தலைவர் செல்வராஜ் திங்கள்கிழமை வெளியிட்ட செய்தி:

திருப்பூர் பழைய பேருந்து நிலையம் எதிரில் உள்ள கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி, ஆராய்ச்சி மையம் சார்பில் திருப்பூரில் செவ்வாய்க்கிழமை வெள்ளாடு வளர்ப்பு குறித்தும், 29-ஆம் தேதி நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்தும் இலவசப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இப்பயிற்சியில் திருப்பூர் மாவட்ட விவசாயிகள் பங்கேற்கலாம். நாட்டுக்கோழி வளர்ப்பு, வெள்ளாடு வளர்ப்பில் விஞ்ஞான முறைகளைக் கடைபிடிப்பது, அதன் வர்த்தக வாய்ப்புகள் குறித்து பயிற்சி அளிக்கப்படும். மேலும் இது தொடர்பான தகவல்களுக்கு 0421-2248524 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## திருமூர்த்தி அணையிலிருந்து தண்ணீர் திறப்பு: விழாவைப் புறக்கணித்த பிஏபி விவசாயிகள்

பிஏபி அதிகாரிகளின் மோசமான நடவடிக்கைகளால் கடைமடை வரை தண்ணீர் சென்று சேருவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகக் கூறி பிஏபி விவசாயிகள் திருமூர்த்தி அணையிலிருந்து தண்ணீர் திறக்கும் விழாவைப் புறக்கணித்தனர்.

பிஏபி தொகுப்பு அணைகளில் இருந்து 49.3 கிலோ மீட்டர் நீளமுள்ள காண்டூர் கால் வாய் மூலம் திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் கொண்டு வரப்பட்டு பினனர் பாசனப் பகுதிகளுக்கு திறந்து விடப்பட்டு வருகிறது. இந்நிலையில், கடந்த 8-ஆம் தேதி பிஏபி தொகுப்பு அணைகளில் இருந்து காண்டூர் கால்வாய் மூலம் திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது. வழக்கமாக சர்க்கார்பதியில் இருந்து அதிகபட்சமாக 1,100 கன அடி தண்ணீர் திறக்கப்படும். ஆனால் இந்த முறை 900 கன அடி தண்ணீர் மட்டுமே திறந்து விடப்பட்டது. இதனால் திருமூர்த்தி அணையின் நீர்மட்டம், அணை திறப்பின்போது 46 அடியை மட்டுமே எட்டியது.

வழக்கமாக அணை முழுக் கொள்ளவை எட்டும் நிலையில் தான் அணை திறந்து விடப்படும் நடைமுறை இருந்து வருகிறது. ஆனால் இந்த முறை 46 அடி நீர்மட்டம் உள்ள நிலையில் அணை திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் 4-ஆம் மண்டல பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் வழங்குவதில் கடுமையான சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. முறை வைத்துத் திறக்கப்படும் தண்ணீர் கடைமடை வரை சென்று சேருமா எனக் கேள்வி எழுந்துள்ளது. இதனால் அதிருப்தி அடைந்த விவசாயிகள் அணையிலிருந்து நீர் திறந்துவிடும் விழாவைப் புறக்கணித்து விட்டனர்.

இது குறித்து பிஏபி விவசாயிகள் கூறியது: அணையின் நீர் மட்டம் 46 அடியே உள்ள நிலையில் இதுவரை இல்லாத புதிய நடை முறைகள் தற்போது பின்பற்றப்பட்டுள்ளன. ஏற்கனவே காண்டூர் கால்வாய் பராமரிப்பு பணிகளில் பெரிய அளவில் குறைபாடுகள், காலதாதம் ஏற்பட்டுள்ளதால் தண்ணீர் திறப்பு தள்ளிப் போடப்பட்டது. இந்நிலையில், காண்டூர் கால்வாயில் இருந்து வழக்க மாக 1,100 கன அடி தண்ணீர் திறந்து விடப்படும் நிலையி0ல் இந்த முறை 900 கன அடி தண்ணீரே திறக்கப்பட்டுள்ளது. இதனால் திருமூர்த்தி அணைக்கு தற்போது 800 கனஅடித் தண்ணீரே வந்து சேர்கிறது. இந்த சூழ்நிலையில் கடைமடை வரை தண் ணீர் வருமா எனக் கேள்வி எழுந்துள்ளது. பல்வேறு வகையில் பிஏபி விவசாயிகள் பாதி க்கப்பட்டு வருவதால் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடும் விழாவைப் புறக்கணித்துள்ளோம் என்றனர்.

**சம்பா, காரீப் பருவ பயிர்களுக்கு மானிய விலையில் விதைகள், இடுபொருள்கள்**

செய்யாறு, அனக்காவூர் வட்டார விவசாயிகளுக்கு சம்பா மற்றும் காரீப் பருவ பயிர்களுக்காக மானிய விலையில் விதைகள், இடுபொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து வேளாண்மை உதவி இயக்குநர் ஏழுமலை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

நெல்: சம்பா பருவத்துக்கு ஏற்ற ரகமான ஏடிடி 45 விதை நெல் கிலோவுக்கு ரூ.5 மானியத்தில் வழங்கப்படுகிறது.

உளுந்து: மானாவாரியில் விதைப்பு செய்ய 50 சதவீத மானியத்தில் சான்று பெற்ற உளுந்து விதைகள் விநியோகம் செய்யப்படுகின்றன.

ஜிப்சம்: தற்போது பயிரிட்டுள்ள மானாவாரி மணிலா பூக்கும் தருவாயில் உள்ளதால் ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைத்து அதிக மகசூல் பெறலாம். எனவே 50 சதவீத மானியத்தில் ஜிப்சம் வழங்கப்பட்டு வருகிறது.

கரும்பு உரம்: சொட்டு நீர் பாசனம் மூலம் கரும்பு சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு நீரில் கரையக் கூடிய உரம் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது.

உயிர் உரங்கள்: மணிலா, பயறு வகை பயிர்களுக்கு இடுவதற்கான ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியா வகை உயிர் உரங்கள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகின்றன.

பிவிசி பைப்புகள்: நீர் சிக்கனத்தை கடைப்பிடித்திட விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் பிவிசி பைப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

எனவே அனக்காவூர் மற்றும் செய்யாறு வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் இவற்றைப் பெற்று பயனடையலாம். மேலும் விவரங்களுக்கு வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.

**"விடுபட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்**

தருமபுரி மாவட்டத்தில் வறட்சி நிவாரணம் வழங்காமல் விடுபட்ட விவசாயிகளுக்கு உடனடியாக வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாயிகள் சங்கம் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

தருமபுரியில் திங்கள்கிழமை நடைபெற்ற தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டக் குழு கூட்டத்திற்கு அந்தச் சங்கத்தின் மாவட்டத் தலைவர் எஸ்.சின்னசாமி தலைமை வகித்தார். மாநில நிர்வாகக் குழு முடிவுகளை விளக்கி மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன் பேசினார்.

பின்னர், கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

அறுபது வயது நிறைவடைந்த விவசாயிகள் அனைவருக்கும் மாதம் ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம் வழங்க வேண்டும். தருமபுரி மாவட்டத்தில் பெரும்பாலான விவசாயிகளுக்கு அரசு அறிவித்த வறட்சி நிவாரணம் கிடைக்கவில்லை.

இதுதொடர்பாக மனு அளித்தும் இதுவரை  வழங்கப்படவில்லை. வறட்சி நிவாரணம் கிடைக்கப் பெறாத அனைத்து விவசாயிகளுக்கும்  நிவாரணம் வழங்க மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவுவதால் விவசாயிகள் பெற்ற பயிர்க் கடனைத் தள்ளுபடி செய்வதோடு, சாகுபடிக்கு புதிய கடன் வழங்க வேண்டும். நீண்ட காலமாக சாகுபடியில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களுக்கு பட்டா வழங்க

அரசைக் கேட்டுக் கொள்வது

என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி செப்டம்பர் 2ஆம் தேதி மாநிலம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. தற்போது, தருமபுரி மாவட்டத்தில் 144 தடை உத்தரவு அமலில் உள்ளதால் ஆர்ப்பாட்டம் நடத்த ஆட்சியரிடம் அனுமதி கோரி மனு அளிப்பது என கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

**மானிய விலையில் தக்காளி, சின்ன வெங்காய விதைகள்**

ராசிபுரம் தோட்டக்கலைத் துறை சார்பில் விவசாயிகளுக்கு மானிய விலையில் தக்காளி, சின்ன வெங்காய விதைகள் வழங்கப்பட உள்ளன.

இதுகுறித்து தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் மோகன் விஜயகுமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

2013-2014ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், சின்ன வெங்காயம் கோ-5 மற்றும் பி.கே.எம்., 1 தக்காளி விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இவற்றை விவசாயிகள் 50 சத மானிய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில், தங்கள் பகுதிக்குரிய உதவி வேளாண்மை அலுவலரை தொடர்பு கொண்டு, மானிய விலையில் விதைகளை பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வறட்சி நிவாரணம் கோரி விவசாயிகள் மனு**

போச்சம்பள்ளி வட்டத்தில் வறட்சியில் காய்ந்து போன மா மற்றும் தென்னை மரங்களுக்கு நிவாரணம் வழங்கக் கோரி தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில், மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

இதுகுறித்து கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் தமிழக விவசாயிகள் சங்க மாவட்டப் பொருளாளர் ராஜாரத்தினம் தலைமையில் திங்கள்கிழமை அளித்த மனு:

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டத்தில் மா மற்றும் தென்னை அதிக அளவு பயிரிடப்பட்டு வருகிறது. இந்த நிலையில், கடந்த சில மாதங்களாகப் போதிய மழையின்றி வறட்சியால், மா மரங்களும், தென்னை மரங்களும் முழுமையாகக் காய்ந்து விட்டன. இதனால், விவசாயிகள் கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

மேலும், தமிழக அரசு அறிவித்துள்ள வறட்சி நிவாரணம் மற்ற மாவட்டங்களைவிட கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு குறைந்த அளவு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் போச்சம்பள்ளி வட்டத்தில் வறட்சி நிவாரண நிதி இதுவரை 12 பேருக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள விவசாயிகள் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

எனவே, தமிழக அரசு மற்ற மாவட்டங்களுக்கு அளித்துள்ள வறட்சி நிவாரண நிதி போல, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்து, மாவட்டம் முழுவதும் வறட்சியால் பாதித்துள்ள அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரண நிதி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் கூறப்பட்டுள்ளது.

தமிழக விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் சென்னையநாயுடு, நிர்வாகிகள் முனிரத்தினம், சண்முகம் உள்பட 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் உடனிருந்தனர்.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி**

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூரில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி திங்கள்கிழமை நடைபெற்றது.

பேரூராட்சி இளநிலை உதவியாளர் பெருமாள் கொடியசைத்து துவக்கி வைத்தார். கிருஷ்ணகிரி சாலை, ஜெகதேவி சாலை, திருப்பத்தூர் இணைப்புச் சாலை மற்றும் சின்னபர்கூர் உள்ளிட்ட முக்கிய பகுதிகளின் வழியாக பேரணி சென்று பேரூராட்சி அலுவலகத்தை வந்தடைந்தது. பர்கூர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவிகள், ஆசிரியர்கள், பேரூராட்சி அலுவலகப் பணியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் மகளிர் சுயஉதவிக்குழுவினர் கலந்து கொண்டு மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்து விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திச்  சென்றனர்.

**பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும்**

தமிழகத்தில் பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்று தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்கத்தினர் அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

சங்கத்தின் மாநில செயற்குழுக் கூட்டம் சேலத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து அதன் தலைவர் கே.ஏ.செங்கோட்டுவேல், பொதுச் செயலர் எம்.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியது:

தமிழகத்தில் பால் உற்பத்திக்குத் தேவையான இடுபொருள்களான தவிடு, கம்பு, மக்காச்சோளம், கடலை பிண்ணாக்கு, தேங்காய் பிண்ணாக்கு, தனியார் நிறுவனங்களின் தீவனங்கள் போன்றவற்றின் விலை 15 முதல் 100 சதம் வரை உயர்ந்துள்ளது.

கடுமையான வறட்சிக் காரணமாக பசுந்தீவனங்களும், உலர் தீவனங்களும் பால் உற்பத்தியாளர்களிடம் இல்லை.

எனவே, வறட்சியின் பிடியிலிருந்து கறவை மாடுகளைக் காப்பாற்ற வேண்டும் என்றால் தமிழக அரசு உடனடியாக அடர் தீவனம், தவிடு ஆகியவற்றை மானிய விலையில் வழங்க வேண்டும்.

மேலும், கர்நாடக மாநிலத்தில் வழங்கப்படுவதைப் போன்று உற்பத்தியாளர்களுக்கு மானியமாகவும், ஊக்கத்தொகையாகவும் பசும்பால், எருமைப் பாலுக்கு முறையே லிட்டருக்கு ரூ.5, ரூ.10 என உயர்த்தி, பசும்பாலுக்கு லிட்டருக்கு ரூ.25-ம், எருமைப் பாலுக்கு ரூ.36-ம் கொள்முதல் விலையாக வழங்க வேண்டும்.

அத்துடன் சத்துணவுத் திட்டத்தின் கீழ் மாணவ, மாணவிகளுக்கு தினமும் பால் வழங்கவும் பரிசீலிக்க வேண்டும்.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் ஊழியர்களின் நீண்டநாள் கோரிக்கைகளான மாத ஊதியம், பால் கொள்முதல் அளவு- தர அடிப்படையில் ஊக்கத்தொகை போன்றவற்றை வழங்கவும் முதல்வர் ஜெயலலிதா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர் அவர்கள்.

**உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் ரூ. 6.77 லட்சத்தில் உதவிகள் அளிப்பு**

புதுக்கோட்டையில் திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறைகேட்பு முகாமில் உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு ரூ. 6.77 லட்சம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

மாவட்ட ஆட்சியரகத்தில் நடந்த முகாமுக்கு ஆட்சியர் செ. மனோகரன் தலைமை வகித்தார். இதில், இலவச வீட்டுமனைப் பட்டா கோரி 47 பேரும், பட்டா மாறுதல் கோரி 129 பேரும் என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மொத்தம் 418 மனுக்கள் பெறப்பட்டன. இம்மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக தரைதளத்தில் 5 மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்ற அவர் மாற்றுத் திறனாளி நல அலுவலர் மூலமாக நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார்.

இதைத்தொடர்ந்து, உழவர் பாதுகாப்புத்திட்டத்தின்கீழ் 5 பேருக்கு இறப்பு நிவாரண உதவித் தொகை தலா ரூ.12,500, குளத்தூர் வட்டத்தைச் சேர்ந்த 5 பேருக்கு விபத்து நிவாரணத் தொகை தலா ரூ.1.02 லட்சம் உள்பட மொத்தம் ரூ.6,77,500- மதிப்பிலான காசோலைகளை வழங்கினார்.

இதில், ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் ஆர். சக்திவேல், சமூகப் பாதுகாப்புத்திட்ட துணை ஆட்சியர் பா. பாக்கியம்தேவகிருபை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**பெரியார் மணியம்மை பல்கலை.யில்ஆக. 30-ல் வேளாண் தொழில்நுட்ப விழா**

தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தில் வேளாண் தொழில்நுட்பத் திருவிழா ஆக. 30-ம் தேதி தொடங்கவுள்ளது.

இதுகுறித்து பல்கலைக்கழகத் துணைவேந்தர் நல். ராமச்சந்திரன் திங்கள்கிழமை செய்தியாளர்களிடம் தெரிவித்தது:

இந்தப் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா கொண்டாட்டங்களில் ஒன்றாக இந்த விழா நடத்தப்படுகிறது. பல்கலைக்கழக வளாகத்தில் ஆக. 30, 31-ம் தேதிகளில்

நடைபெறவுள்ள இந்த விழாவில் 12 தலைப்புகளில் அமர்வுகள் நடத்தி, விவாதிக்கப்படவுள்ளது. இவை தீர்மானங்களாகவும் இயற்றப்படவுள்ளன.

ஒவ்வொரு அமர்விலும் வேளாண் அறிஞர் ஒருவரும், முன்னோடி விவசாயிகள் இருவரும் பேசவுள்ளனர். கேள்வி - பதில் மற்றும் தீர்மானங்கள் இயற்றுதல் ஆகியவற்றுடன், அந்த அமர்வை வழிநடத்தும் நிபுணர் தன்னுடைய கருத்துகளையும் விளக்குவார்.

மேலும், இன்றைய சூழ்நிலையில் பயன்படுத்தக்கூடிய வேளாண் கருவிகள், விதைகள், உரங்கள், பூச்சிமருந்துகள், உயிரி உரங்கள், பயிர் காப்பீட்டு நிறுவனங்கள், வங்கிகள், அரசுத் துறைகள் உள்பட 60-க்கும் அதிகமான காட்சி அரங்குகள் அமைக்கப்படவுள்ளன. கையேடும் வெளியிடப்படவுள்ளது.

ஆக. 30-ம் தேதி காலை பல்கலைக்கழக வேந்தர் கி. வீரமணி தலைமையில் நடைபெறவுள்ள தொடக்க விழாவை தோட்டக்கலை வல்லுநர் த. வெங்கடபதி ரெட்டியார் தொடக்கிவைக்கிறார். ஆக. 31-ம் தேதி மாலை நிறைவு விழா நடைபெறவுள்ளது என்றார் அவர்.

காவிரி டெல்டா மேம்பாட்டு ஆய்வு மையத் தலைவர் மன்னார்குடி எஸ். ரங்கநாதன், பல்கலைக்கழக ஊரக மேம்பாட்டு மைய ஆலோசகர் எஸ். சாமி சுப்பிரமணியன், தமிழ்நாடு திட்டக் குழு முன்னாள் உறுப்பினர் ஜி. சிதம்பரம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 115.83 அடியாக இருந்தது**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 115.83 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 6,990 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 17,996 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து நொடிக்கு காவிரி, வெண்ணாற்றில் தலா 4,000 கன அடி வீதமும், கல்லணைக் கால்வாயில் 2,704 கன அடி வீதமும், கொள்ளிடத்தில் 715 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

**மங்கலகுன்றில் விவசாயிகளின் விவரங்கள் பதிவு செய்யும் முகாம்**

கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட மிடாலம் ஊராட்சி மங்கலகுன்று பகுதியில் விவசாயிகளின் விவரங்கள் பதிவு செய்யும் முகாம் நடைபெற்றது.

தமிழக அரசு வேளாண் வளர்ச்சியில் 2-ம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த புதிய திட்டங்களை வகுத்து விவசாய உற்பத்தியைப் பெருக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

இதற்காக விவசாயிகளின் பொதுத் தகவல்களை இணையதளத்தில் பதிவுசெய்ய வேளாண் துறை அதிகாரிகள், களப்பணி அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இதில் விவசாயிகளின் அடிப்படை புள்ளிவிவரங்களான பெயர், முகவரி, தொலைபேசி அல்லது கைப்பேசி எண்கள், வங்கி விவரங்கள், கல்வித் தகுதி, குறு, சிறு விவசாயிகளின் விவரம், நிலத்தின் பரப்பு, கிராமப்புல எண், நன்செய், புன்செய் நிலமா என்பன உள்ளிட்ட பல்வேறு விவரங்கள் சேகரிக்கப்பட்டு இணையதளத்தில் பதிவு செய்யப்படுகிறது.

கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட 8 ஊராட்சிகளிலும் முதல்கட்ட முகாம்கள் நடைபெறுகின்றன.

கிள்ளியூர் வட்டார துணை வேளாண் அலுவலர் ராமச்சந்திரன், உதவி வேளாண் அலுவலர் ரமேஷ், தொழில்நுட்ப அலுவலர்கள் அருண், ஷானு, செர்லின் மேரிபாய் உள்ளிட்டோர் இப் பணியில் ஈடுபட்டனர். 90-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

**இன்று மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம், புதுவையில் இன்று செவ்வாய்க்கிழமை ஆங்காங்கே மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொருத்தவரையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவில் மழையோ, இடியுடன்கூடிய மழையோ பெய்யக்கூடும்.

இந்த நிலையில், திங்கள்கிழமை காலை வரையிலான நிலவரப்படி தொழுதூரில் 70 மி.மீ. மழையும், நன்னிலம், தேவாலா, சிதம்பரத்தில் 30 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

காட்டுமன்னார்கோயில், கும்பகோணம், நடுவட்டம், கூடலூர், திருவிடைமருதூர், உளுந்தூர்பேட்டை ஆகிய பகுதிகளில் 20 மி.மீ., பரங்கிப்பேட்டை, இளையான்குடி, ஆடுதுறையில் 10 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

**மேட்டூர் நீர்மட்டம் நான்கு நாள்களில் 2 அடி குறைந்தது**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்ததால், அணையின் நீர்மட்டம் நான்கு நாள்களில் இரண்டு அடி குறைந்தது.

கர்நாடகத்தில் கடந்த மாதம் தொடர்ந்து பலத்த மழை பெய்ததால், அங்குள்ள அணைகளில் நீர்மட்டம் வேகமாக உயர்ந்தது. உபரிநீர் காவிரியாற்றில் திறக்கப்பட்டு, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்தது. நீர்மட்டமும் வேகமாக உயர்ந்தது. தற்போது மழை குறைந்ததால், அங்குள்ள அணைகளிலிருந்து உபரிநீர் திறக்கப்படுவது குறைக்கப்பட்டுள்ளது. இதனால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாகக் குறைந்து வருகிறது. திங்கள்கிழமை மாலை அணைக்கு வரும் நீரின் அளவு நொடிக்கு 6,990 கன அடியாகக் குறைந்தது. நீர்வரத்து குறைந்து வருவதுடன், பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 18 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டதாலும், கடந்த 22-ஆம் தேதி 118.02 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 115.83 அடியாகக் குறைந்தது.

கடந்த நான்கு நாள்களில் அணையின் நீர்மட்டம் 2.19 அடி குறைந்துள்ளது. திங்கள்கிழமை அணையின் நீர் இருப்பு 86.97 டி.எம்.சியாக இருந்தது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**27.08.2013**

## உழவர் சந்தைக்குள் வியாபாரிகள்...ஊடுருவல்! இரட்டை விலையால் மக்கள் பாதிப்பு

ஈரோடு: உழவர் சந்தையில், விவசாயிகள் போர்வையில், வியாபாரிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதாக புகார் எழுந்துள்ளது. ஒரே விளை பொருளுக்கு இரட்டை விலை நிர்ணயிப்பதால், பொது மக்கள் பாதிக்கின்றனர். விவசாய விளை பொருள்கள் இடைத்தரகர் இன்றி நேரடியாக விவசாயிகள் மூலம் விற்பனை செய்து பயன்பெற வசதியாக, தமிழகம் முழுவதும் உழவர் சந்தை கடந்த, 2000ம் ஆண்டில் துவங்கப்பட்டது.

ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு சம்பத் நகர், பெரியார் நகர், கோபி, சத்தி, பெருந்துறை ஆகிய இடங்களில் உழவர் சந்தைகள் செயல்படுகிறது.
விளைபொருள்களுக்கு கட்டுபடியாகும் விலையை அரசு உறுதி செய்கிறது. உழவர் சந்தை விவசாயிகளுக்கு, மொத்த அங்காடி விலையில், 20 சதவீதம் கூடுதலாக விளைபொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.
இதன் மூலம் விவசாயிகள் தங்கள் காய்கறிகளை நேரடியாக மக்களுக்கு விற்பனை செய்து பயன்பெற முடிகிறது. இதன் மூலம் சேதாரம், இடைத்தரகள் இன்றி, தவிர்க்கப்பட்டு நியாயமான விலையை விவசாயிகள் நேரடியாக லாபமாக பெற்று வருகின்றனர்.
உழவர் சந்தையில் உழவர் அட்டை பெறுவதற்காக தங்கள் வசம் உள்ள நிலத்தின் பட்டா, சிட்டா, அடங்கல் விபரங்களை கொடுத்து, விவசாயி நிலம் நஞ்சை அல்லது புன்செய் பயிரிடப்படும் பயிர்கள் பற்றிய விபரங்களை கொடுத்தால், தோட்டக்கலை அதிகாரிகள் ஆய்வு செய்தபின், வேளாண் துறை பதிவுக்கு பின், உழவர் சந்தையில் அடையாள அட்டை வழங்கப்படுகிறது. தற்போது சம்பத் நகர்

உழவர் சந்தையில், 120 கடைகள் உள்ளன. இங்கு, 480 பேருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் போர்வையில் பலர், போலியாக அடையாள அட்டைகள் பெற்று வெளி மார்க்கெட்டில் காய்கறிகளை வாங்கி வந்து, அதிகாரிகள் துணையோடு, 20 சதவீதம் விலை நிர்ணயம் செய்து விற்கின்றனர். மேலும் இவர்கள் உழவர் அட்டை வைத்திருப்பதால், காய்கறிகளை இலவசமாக பஸ்களில் ஏற்றிக்கொள்ள முடிகிறது.

ஈரோடு சம்பத் நகர் உழவர் சந்தையில், 60 சதவீதம் அடையாள அட்டைகளை உழவர் பெயரில் விவசாயிகள் அல்லாத வியாபாரிகள் தான் உள்ளனர்.

ஈரோடு, நசியனூர், காஞ்சிகோவில், சித்தோடு, மொடக்குறிச்சி, வெள்ளோடு, அவல்பூந்துறை உட்பட பல்வேறு பகுதிகளில் இருந்து தினமும், 20 டன் அளவுக்கு காய்கறிகள் வருவதாக அதிகாரிகள் கூறுகின்றனர். இங்கு, ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள் காய்கறிகள் வாங்குவதின் மூலம், தினமும், மூன்று லட்சம் அளவுக்கு விற்பனையாவதாக, வேளாண் அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதுகுறித்து உழவர் சந்தை விவசாயிகள் கூறியதாவது:

ஈரோடு சம்பத் நகர் உழவர் சந்தையில் பாதிக்கு மேல் வியாபாரிகள் தான் உள்ளனர். வெளி மார்க்கெட்டில் மொத்தமாக காய்கறிகளை வாங்கி வந்து நல்ல விலைக்கு விற்கின்றனர். உண்மையான விவசாயிகள் பயன்பெற முடிவதில்லை. தற்போது சின்னவெங்காயம் விலை உச்சத்தில் உள்ளது. கிலோ ஒன்றுக்கு வெளி மார்க்கெட்டில், 40 ரூபாய்க்கு கிடைக்கிறது.

ஆனால், உழவர் சந்தையில் வியாபாரிகள் விற்கும் வெங்காயம், 42 ரூபாயும், விவசாயி விற்கும் வெங்காயம், 40 ரூபாயும், அதிகாரிகள் நிர்ணயம் செய்கின்றனர். ஏதாவது கேட்டால், ஏதாவது காரணம் காட்டிவிடுகின்றனர். மிக குறைந்த விவசாயிகளே உழவர் சந்தைக்கு வருவதால், யாரும் இவர்களை மீறி ஏதும் செய்ய முடியாத நிலை உள்ளது, என்றனர்.

### 34 மெ.டன் நெல் விதைக்கு "தடா' ஆய்வுத்துறை து.இயக்குனர் தகவல்

கரூர்: கரூர் மாவட்டத்தில் காவிரி டெல்டா பாசன பகுதிகளில், விவசாயிகளுக்கு தரமான சான்று பெற்ற விதைகள் வழங்குவதை உறுதி செய்ய, ஈரோடு விதை ஆய்வு துணை இயக்குனர் அண்ணாத்துரை தலைமையில், சிறப்பு குழு கரூர் மாவட்டத்தில், கரூர், கிருஷ்ணராயபுரம், குளித்தலை வட்டாரங்களில், அரசு, தனியார் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு மையங்களில் விதை விற்பனை நிலையங்களை ஆய்வு செய்தனர். இவர்கள் விதைச்சட்டத்தின்படி, தரமான விதைகளை, உரிய முறையில் சேமித்து, தரம் குறையாமல் உரிய விற்பனை பட்டியல் மூலம் விவசாயிகளுக்கு விற்பனை செய்யபடுகிறதா? என ஆய்வு நடத்தினர்.

இதில் விதிமுறைகளை கடைபிடிக்காமல் இருப்பு வைத்திருந்த, 13.42 லட்சம் ரூபாய் மதிப்புள்ள, 34 மெட்ரிக் டன் நெல் விதைகளுக்கு விற்பனை செய்ய தடை உத்தரவு விதக்கப்பட்டள்ளது.

இந்த ஆய்வின் போது, ஈரோடு மாவட்ட விதை ஆய்வாளர்கள் சாமுவேல், ஜீவதயாளன், கரூர் விதை ஆய்வாளர் தண்டபாணி இருந்தனர். தகவலை கரூர் விதை ஆய்வு துணை இயக்குனர் ரமேஷ்பாபு தெரிவித்தனர்.

### சாமந்தி பூ சாகுபடியில்விவசாயிகள் ஆர்வம்

பாலுார்:பாலுார் அருகே, அதிக லாபம் தரும் சாமந்தி பூக்கள் சாகுபடி செய்வதில், விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.காட்டாங்கொளத்துார் ஒன்றி-யத்திற்கு உட்பட்ட பாலுார் ஊராட்சியில், மேலச்சேரி கிராமம் அமைந்துள்ளது. இங்கு, விவசாயிகள் அதிகம் வசிப்பதால், இப்பகுதியின் பிரதான தொழிலாக, விவசாயம் விளங்கி வருகிறது, இப்பகுதியில், உள்ள விவசாயிகள் அதிக லாபம் தரும், மலர் சாகுபடி செய்வதில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுகுறித்து, மேலச்சேரியை சேர்ந்த சுப்பிரமணி என்ற விவசாயி கூறியதா-வது:மலர் சாகுபடியில் அதிக லாபம் கிடைப்பதால், எனக்கு சொந்தமான, 40 சென்ட் நிலத்தில், சாமந்தி பூ செடிகளை பயிரிட்டுள்ளேன். இதற்காக, நிலத்தை

நன்கு உழுது, 5 டன் தொழு உரம் ஈடவேண்டும். பின்னர், நன்கு பராமரிக்கப்பட்ட நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். நாற்று விடுவதற்கான, சாமந்தி பூ விதை-களை, பெங்களூர் பகுதியில் இருந்து வாங்கி வருகின்றோம். ஒருவிதை, 1.60 பைசாவிற்கு வாங்குகின்றோம்.

சிலர், நாற்றுகளை வாங்கியும் நடவு செய்கின்றனர். ஒருநாற்று, 2.60 பைசாவிற்கு விற்பனை செய்கின்றனர். ஏக்கருக்கு, 3,000 நாற்றுகளை நடவு செய்யலாம். நாற்று நடவு செய்த பின், வாரம் ஒருமுறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.நடவு செய்த 40 நாட்களில், அரும்புகள் எடுக்கும். பின்னர், 2 நாட்களுக்கு ஒருமுறை 60 கிலோ முதல் 80 கிலோ வரையிலான சாமந்தி பூக்களை அறுவடை செய்யலாம். வாரம் ஒருமுறை, களை எடுக்க வேண்டும். இதற்காக, 2,000 ரூபாய் செலவாகும்.வெயில் நாட்களில், செடிகளில் அரும்புகள் அதிகமாக காணப்படும். அறுவடை செய்யப்-படும் பூக்களை, ஒருகிலோ 20 முதல் 40 ரூபாய் வரை விற்பனை செய்கிறேன். திரு-விழா மற்றும் விசேஷ நாட்களில் கூடுதல் விலைக்கு விற்பனையாகும்.மேலும், அனைத்து செலவுகளும் போக, ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபாய் லாபமாக கிடைக்கும்.இவ்வாறு அவர் கூறினார்.

## மார்க்கெட் கமிட்டியில் நெல் கொள்முதல் நிறுத்தம் : தொடர் பிரச்னைகளால் செஞ்சியில் பரபரப்பு

செஞ்சி:செஞ்சி மார்க்கெட் கமிட்டியில் நேற்று அடுத்தடுத்து எழுந்த பிரச்னையால் நெல் கொள்முதல் நின்றது.செஞ்சி மார்க்கெட் கமிட் டிக்கு நேற்று 416 விவசாயிகளின் 5000 நெல் மூட்டைகள், 203 விவசாயிகளின் 500 மணிலா மூட்டைகள் விற்பனைக்கு வந்தன.மறியல்மார்க்கெட் கமிட்டியில் பணி செய்த தொழிலாளர் ஒருவர் இறந்து விட்டதால் வேலை நிறுத்தம் செய்வதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர். இதனால் மூட்டைகளை மாற்றும் பணி முடங்கியது. பாதித்த விவசாயிகள் காலை 8 மணிக்கு மார்க்கெட் கமிட்டி முன்பு மறியல் செய்தனர்.2 மணி நேரம் தாமதம்டி.எஸ்.பி., பன்னீர் செல்வம், மார்க்கெட் கமிட்டி கண்காணிப்பாளர் சரவணன் பேச்சு வார்த்தை நடத்தி மறியலை கைவிட செய்தனர். தொழிலாளர்களும் இறந்த தொழிலாளிக்கு மரியாதை செலுத்திய பின்

மூட்டைகளை மாற்ற ஒப்புக்கொண்டனர். இதனால் 2 மணி நேரம் தாமதமானது. இதற்குள் வியாபாரிகளுக்கு மூட்டை மாற்றும் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டு வேலை நிறுத்தம் செய்ய போவதாக தகவல் பரவியது. இதனால் நெல் வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொள்வதில்லை என முடிவு செய்தனர். மீண்டும் தொழிலாளர்களின் பிரதிநிதிகளுடன் அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தினர். தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்யவில்லை என கூறினர்.விலை பிரச்னைவெளியூர் நெல் வியாபாரிகளில் சிலர் சென்று விட்டதால் ஏலம் நடத்தினால் விலை குறையும் நிலை உருவானது. எனவே வியாபாரிகள் ஏலத்தை நிறுத்த கேட்டு கொண்டனர். இதையறிந்த விவசாயிகள் கேட்டை பூட்டி மீண்டும் மறியல் செய்தனர். இவர்களிடம் கண்காணிப்பாளர் சரவணன் பேச்சு வார்த்தை நடத்தி விலை குறைவதால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும் என்பதை விளக்கினார். இதையடுத்து விவசாயிகள் சமாதானமடைந்தனர்.
மழை வந்தால் நெல் மூட்டைகள் நனையாமல் இருக்க கமிட்டி நிர்வாகத்தினர் விவசாயிகளுக்கு தார்பாய்களை கொடுத்தனர். மணிலா மற்றும் பல தானியத்திற்கான ஏலம் வழக்கம் போல் நடந்தது.அடுத்தடுத்த சம்பவத்தினால் செஞ்சி மார்க்கெட் கமிட்டியில் நேற்று பரபரப்பு நிலவியது.

## சிறுவள்ளி கிழங்கு சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

விழுப்புரம்:விழுப்புரம் அடுத்த விராட்டிக்குப்பம் பகுதியில் சிறுவள்ளி கிழங்கு சாகுபடியில் விவசாயிகள் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ளனர்.உடலுக்கு குளிர்ச்சியை ஏற்படுத்தி, நல்ல ஆரோக்கியத்தை உண்டாக் கும் கிழங்கு வகைகளில் சிறுவள்ளி கிழங்கும் ஒன்றாகும். உருளைக் கிழங்கு போன்ற வடிவமும், மேற்பகுதியில் சிறு வேர்களுடன், இக்கிழங்கு காணப்படும். பல்வேறு மருத் துக் குணங்கள் இருப்பதால், சித்த வைத்தியத்திலும் இது பயன்படுகிறது.மார்ச் அல்லது ஏப்., மாதங்களில் இக்கிழங்கு பயிர் நடவு செய்யப்படுகிறது. 10 மாதங்கள் கழித்து ஜன., அல்லது பிப்., மாதங்களில் அறுவடை செய்யப்படும். ஒரு கிலோ கிழங்கு 30 ரூபாய் வரை விலை போகிறது. சாகுபடியில் குறைந்த செலவும், கூடுதல் லாபமும் கிடைப் பதால், விழுப்புரம் அருகிலுள்ள விராட்டிக்குப்பம், நன்னாடு, பாளை யம் கிராமங்களில் விவசாயிகள் பலர் ஆர்வமுடன் சிறுவள்ளி கிழங்கு பயிர் செய்துள்ளனர்.

## சின்ன வெங்காயம் மானியமாக வழங்கல்

ராசிபுரம்: "சின்ன வெங்காயம், 50 சதவீத மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது' என, ராசிபுரம் தோட்டக்கலை உதவி இயக்குனர் மோகன் விஜய்குமார் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:
நடப்பு, 2013-14ம் ஆண்டுக்கு ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், சின்ன வெங்காயம் "கோ 5', "பி.கே.எம்., 1' தக்காளி விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. சின்ன வெங்காயம், தக்காளி சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள், 50 சதவீத மானிய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில், தங்கள் பகுதிக்குரிய உதவி வேளாண் அலுவலர்களை தொடர்பு கொண்டு, மானியத்தில் விதைகளை பெற்று பயன்பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**27.08.2013**

**புது வரத்து அதிகரிப்பால் அரிசி விலை குறைகிறது**



மதுரை : தமிழகத்தில் புது அரிசியின் வரத்து அதிகரிப்பால் விலை குறையத் துவங்கி உள்ளது. தமிழகத்தின் அரிசி தேவையை தமிழகம் மட்டுமின்றி கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா, கொல்கத்தா, பஞ்சாப் மற்றும் சட்டீஸ்கர் போன்ற மாநிலங்களில் விளையும் அரிசிகளும் நிறைவு செய்கின்றன. கடந்த ஆண்டு தமிழகத்தில் ஏற்பட்ட கடும் வறட்சியால் விவசாயப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இதனால் தமிழகம் மட்டுமின்றி பெரும்பாலான மாநிலங்களிலும் நெல் மற்றும் அரிசியின் தேவை அதிகரித்தது. இதனால் அரிசி விலை அடிக்கடி உயர்ந்து கொண்டே போனது. இந்த விலை உயர்வு பொதுமக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், கர்நாடகா உள்ளிட்ட மற்ற மாநிலங்களில் சில மாதங்களாக பருவ மழை நன்றாக பெய்துள்ளது. இதன் காரணமாக விவசாயிகள் நெல் நடவுப் பணிகளில் தீவிரமடைந்துள்ளனர். இதனால் ஆங்காங்கே அவர்கள் இருப்பு வைத்திருந்த நெல் மற்றும் அரிசியை தங்களின் தேவை போக மீதமுள்ளவற்றை வெளிச் சந்தை மார்க்கெட்டுக்கு கொண்டு வந்துள்ளனர். இதனால் தேவை அதிகம்

உள்ள தமிழகம் போன்ற மாநிலங்களுக்கு புது வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக அரிசி விலை சற்று குறையத் துவங்கி உள்ளது. மூட்டைக்கு ரூ.200 முதல் 300 வரை குறைந்துள்ளது.

மேலும் விவசாயப் பணிகள் முடிந்து நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் எதிர்பார்த்தபடி அறுவடைப் பணிகள் முடியும் பட்சத்தில் அரிசியின் விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது. இது குறித்து அரிசி மொத்த வியாபாரி சாய்சுப்பிரமணியன் கூறுகையில், 'கடந்த 8 மாதங்களுக்கு மேலாக அரிசி விலை உயர்ந்து கொண்டே போனது. தற்போது புதுரகங்கள் வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்துள்ளது. ஆனால், ஆடி மாதம் என்பதாலும், தற்போது பணப்புழக்கம் குறைந்துள்ளதாலும் வியாபாரம் சற்று குறைந்துள்ளது. இதனால் வியாபாரிகள் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர்' என்றார்.

விலை விவரம்

| ரகம் (100 கிலோ) | பழைய விலை | தற்போது |
|---|---|---|
| கர்நாடகா பொன்னி | ரூ.4000 வரை | ரூ.3700 வரை |
| கல்சர் மற்றும் இட்லி அரிசி | ரூ.3200 வரை | ரூ.2900 வரை |
| செல்லப்பொன்னி | ரூ.3200 வரை | ரூ.2900 வரை |
| டீலக்ஸ் பொன்னி | ரூ.3400 வரை | ரூ.3100 வரை |
| பச்சரிசி | ரூ.2600 வரை | ரூ.2400 வரை |

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**27.08.2013**

## ரூபாய் மதிப்பு சரிவால் நடப்பு ஆண்டில், ஆப்பிள் இறக்குமதி குறையும்



நடப்பு 2013–ஆம் ஆண்டில், இந்தியாவின் ஆப்பிள் இறக்குமதி குறையும். இதற்கு அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாயின் வெளிமதிப்பு சரிவே முக்கிய காரணம் என அமெரிக்க விவசாய துறை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சென்ற வார வர்த்தகத்தில்,அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் வெளிமதிப்பு வர்த்தகத்தின் இடையே வரலாறு காணாத அளவிற்கு 65.56–ஆக வீழ்ச்சியடைந்தது. ரூபாய் மதிப்பின் சரிவின் காரணமாக இறக்குமதி செலவினம் அதிகரிக்கும். இதன் காரணமாக ஆப்பிள் இறக்குமதி சரிவடையும்.

சர்வதேச அளவில் ஆப்பிள் உற்பத்தியில் இந்தியா மூன்றாவது பெரிய நாடாகும். சாதகமற்ற பருவநிலை மற்றும் குறைந்தபட்ச குளிர்பதன வசதி கிடங்குகள் போன்ற காரணங்களால் உள்நாட்டில் உற்பத்தி குறைந்துள்ளது. அதேசமயம் நடுத்தர மக்களிடம் ஆப்பிளுக்கான தேவை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக தேவையை ஈடுசெய்ய இறக்குமதியை சார்ந்து இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்ப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டில் ஆப்பிள் இறக்குமதி ஒன்பது மடங்கு அதிகரித்து 1.86 லட்ச டன்னாக உயர்ந்துள்ளது. இது 10 ஆண்டுகளுக்கு முன்பு 20,093 டன்னாக இருந்தது. மேலும் மதிப்பு அடிப்படையில் 19.60 கோடி டாலராக உள்ளது. சென்ற நிதி ஆண்டில் நாட்டின் ஆப்பிள் உற்பத்தி 18.50 லட்சம் டன்னாக சரிவடைந்தது. இது முந்தைய ஆண்டில் 22 லட்சம் டன்னாக உயர்ந்திருந்தது. ஜம்மு – காஷ்மீர், இமாலச்சல பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் மாநிலங்கள் ஆப்பிள் உற்பத்தியில் முக்கிய பங்களிப்பை கொண்டுள்ளன.

அமெரிக்கா, சீனா, நியுசிலாந்து, இத்தாலி, ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து இந்தியா ஆப்பிள் இறக்குமதி செய்து வருகிறது.